<u>4வது சிறுவழக்குகள் நீதிமன்றம், சென்னை- 600 104.</u>

நாள். 04/06/2026

எம்.சி.ஓ.பி எண்.7149/2013

ம.சா. 1

பெயர்.நாகூர்மீரான்

த/பெ.திரு.முகைதீன்

வயது. 53

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த மனுவில் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். ம.சா.ஆ 1 முதல் 13 வரை ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது. மசாஆ6 ஆவணம் 2-ம்எதிர்மனுதாரர் வேண்டுதலின் பேரில் ஆட்சேபணை செய்யப்படுகிறது.

**<u>எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது பின்னால் வந்த மினி லாரி இருசக்கர வாகனத்தில் மோதி விட்டது. விபத்து பதிவேட்டை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், அதை தாக்கல் செய்தால் தான் விபத்து ஏற்பட்டதா இல்லையா எனபது தெரிய வரும் என்றால் சரியல்ல. விபத்து குறித்து இறுதி அறிக்கை, மாதிரி வரைப்படம் மற்றும் மோட்டார் வாகன ஆய்வறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 15.08.2013 பிறகு தொடர் சிகிச்சை ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வருமானம் மற்றும் தொழில் குறித்து ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தான் இருசக்கர வாகதன்தை வேகமாக ஓட்டிச்சென்று திடிரென்று பிரேக் போட்டதினால், பின்னால் வந்த வாகனம் மோதி விட்டது. விபத்திற்கு நானும் ஒரு காரணம் என்றால் சரியல்ல. மசாஆ6 ஆவணமானது வழக்கிற்காக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. விபத்தில் எனன்கு ஏற்பட்ட காயங்கள் சொற்ப்ப காயங்கள் என்றும், சிகிச்சைக்கு பிறகு குணமடைந்து விட்டது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக் கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.

ARUNDHADHI MAGESH

Digitally signed by ARUNDHADHI MAGESH